# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2047/46 - 2017 නොවැම්බර් 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.11.30

*2047/46 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், கொட்டபொல பிரதேச செயலாளர் பிரிவில், மொரவக் கோரளை சிறு பிரவில், மத்துகொபே (அ. க. பி. 169) கிராமத்தில் அமைந்துள்ள, நிலஅளவை அதிபரால் 2009.06.30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. எம்ஆர்/கேரீபி/ 2009/ 133 ஆம் முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு 'ஏ' எனக் குறிப்பிடப்பட்ட 369.1898 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் :

**01. துண்டு 'ஏ' - குருலுகலவத்த அல்லது புஞ்சி குருலுகல அல்லது கொஸ்குலன ஹேன - விஸ்தீரணம் : சுமார் 369.1898 ஹெக்டயார்**

வடக்கு : கஹடகஹதொல மற்றும் சப்ரகமுவ மாகாணத்தின் எல்லை ; கிழக்கு : சப்ரகமுவ மாகாணத்தின் எல்லை, விஹாரதொல மற்றும் வரையறுக்கப்பட்ட மதுர தோட்ட சங்கம் உரிமை கோரும் என்சல்வத்த ; தெற்கு: விஹாரதொல மற்றும் வரையறுக்கப்பட்ட மதுர தோட்ட சங்கம் உரிமை கோரும் குருலுகலவத்த ; மேற்கு : வரையறுக்கப் பட்ட மதுர தோட்ட சங்கம் உரிமை கோரும் குருலுகல, நானதொல மற்றும் கஹடகஹதொல.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல : எல்டீ/05/2004/எப்ஆர்/59.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2017, ஒற்றோபர் 26.

12 - 513